# வடமாகாணப் பாடசாலைகளின் உளஆற்றுப்படுத்தற் சேவையிலுள்ள சவால்களும் அவற்றைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளும்

**சு.இக்னேசியஸ் கிளனி[1], க.கஜவிந்தன்[2]**
[1]ஆசிரியர், யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.
[2]சிரேஸ்ட விரிவுரையாளர், மெய்யியல் துறை யாழ்ப்பாணம்.

**ஆய்வுச் சுருக்கம் :** பாடசாலைகளிலுள்ள மாணவர்களின் கற்றற் செயற்பாட்டை வலுப்படுத்தவும், மாணவர்களைப் பாடசாலைகளிலேயே இனங்கண்டு வழிப்படுத்தவும், அவர்களின் ஆற்றல் திறன்களுக்கேற்ற துறைகளை தெரிவு செய்து இலக்கை நோக்கிப் பணயிக்கவும் வழிசெய்யக் கூடிய துறையாகப் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டதே பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனையும் சேவையாகும். (School Based Guidance & Counseling) பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவையானது ஓர் முக்கிய அம்சமாக அமைய வேண்டும் என்பதை கல்விப்புலம் சார்ந்த அனைவரும் உணர்ந்துள்ளனர். ஏனெனில் மாணவர்கள் நாளாந்தம் பல்வேறு விதமான சாதரண, அசாதாரணமான சிக்கல்களை எதிர் கொள்வதனால் அவர்களுடைய நாளாந்த கற்றற் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. அவ்வாறான சவால்கள் நிறைந்த சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளுக்கு சரியாக முகங்கொடுப்பதற்கு சக்தியையும், தைரியத்தையும் வழங்கி அவர்களைத் திருப்தி செய்கின்ற, வழிப்படுத்துகின்ற துறையாக பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனையும் பிரிவு காணப்படுகின்றது. கற்றலின் போதும் வெவ்வேறு வயது மாணவர்களுக்குக் கற்பித்தலின் போதும் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் சிக்கல்களையும் அணுகுவதற்கும் ஆசிரியர்கள், பெற்றோருக்கும் ஏற்படுகின்ற சவால்களையும் நிவர்த்திக்கக் கூடிய வகையில் பாடசாலைகளையும் சமூகத்தையும் இணைத்த வகையில் இச்சேவை வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பாடசாலைமட்ட வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையிலுள்ள சவால்களை வெளிக் கொணர்வதுடன் அவற்றுக்கான பரிந்துரைகளையும் பற்றிப் பேசுவதாக அமைகின்றது. இவ்வாய்வில் அளவைநிலை ஆய்வு மற்றும் பண்பு நிலைஆய்வு பின்பற்றப்பட்டுள்ளது. இவ்வாய்வானது வடமாகாண வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையிலுள்ள ஆசிரியர்களை மையப்படுத்தி பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகளை மையப்படுத்திய விபரண ஆய்வாக உள்ளது. இவ்வாய்வானது பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையின் இன்றியமையாத தன்மையையும் பாடசாலைகளில் அவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதாக அமைகின்றது.

## 1. ஆய்வின் அறிமுகம்

பாடசாலைகளிலுள்ள மாணவர்களின் கற்றற் செயற்பாட்டை வலுப்படுத்தவும், மாணவர்களைப் பாடசாலைகளிலேயே இனங்கண்டு வழிப்படுத்தவும் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனையும் சேவையானது பாடசாலைகளில் மாணவர்களுக்கு மட்டுமன்றி அவர்களை வழிப்படுத்துகின்ற ஆசிரியர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்குமான வழிப்படுத்தல்களையும் மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு துறையாகவும் அமையப் பெற்றுள்ளது..

எனினும் பாடசாலைகளில் இவற்றை முறையாக நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. குறிப்பாக இத்துறை சார்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை போதாமை முக்கிய பிரச்சினையாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. 2005 முதலாக பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற இச்சேவையில் பட்டதாரி நியமனத்தில் குறைந்தளவானவர்களே பணியாற்றுவதுடன், இதற்காகப் பயிற்றப்பட்டோர், நட்புதவியாளர் (Befriends) எனப்பலதரப்பட்ட வகையில் சுமார் 500 ஆசிரியர்கள் அளவில் வடமாகாணத்தில் முழுநேரமாகவும் பகுதிநேரமாகவும் இச்சேவையிலீடுபட்டாலும் இவ்வாற்றுப்படுத்தற் சேவையானது தனது நோக்கத்தை நோக்கிப் பயணிக்கவில்லை.

இவ் ஆய்வானது வடமாகாணப் பாடசாலைகளில் பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனையும் சேவை எதிர் கொள்கின்ற சவால்களை வெளிக் கொணர்ந்து, அவற்றுக்கான பரிந்துரைகளையும் முன்வைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆற்றுப்படுத்தல்**

உளவியலானது மிகப் பரந்துபட்ட துறையாகும். பல்வேறுபட்ட உளவியலாளர்கள் விஞ்ஞானம் சார்ந்த முறையில் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களினையும் கோட்பாடுகளையும் உளவியல் தொடர்பாக முன்வைத்துள்ளனர். கல்வி பற்றி ரூசோ கூறும் போது "கல்வி மூலம் ஒரு மனிதனை நல்ல மனிதப் பண்புடையவராகவும் நற்குடிமகனாகவும் ஆக்கி, அவனைப் போன்றவர்கள் மூலமாக நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்" என்றார்.

ஆற்றுப்படுத்தல் என்பது ஒரு கலந்துரையாடல் போன்றது. எனினும் சில திறன்களை அது முதன்மைப்படுத்தியிருக்கும். இரகசியம் காத்தல், செவிமடுத்தல், ஒத்துணர்வோடு இருத்தல் போன்றவை முதன்மை பெறுகின்றன. இங்கு அவரவர் தத்தமது பிரச்சினைகளை எதிர் கொள்ள வலிமையுள்ளவர்கள் என்பதை எடுத்துணர்த்தி அவ்வலிமையை மேலும் பலப்படுத்துவதாகும். இச் செயற்பாட்டின் போது அறிவுரைகள், ஆலோசனைகள் வழங்கப்படுவதில்லை. மாறாக "உங்களின் வாழ்வை மேலும் சிறப்பாக வாழ உங்கள் பிரச்சினைகளை நீங்களே தீர்த்துக் கொள்ள மேற்கொள்ளப்படும் உளவியற் திறன் சார் உதவியையே ஆற்றுப்படுத்தல்" என்கின்றோம்

ஆற்றுப்படுத்தல் என்பது ஒரு மனிதன் தனது சாதாரண வாழ்க்கையில் ஈடுபடுகின்ற போது அவன் எதிர்பார்த்தோ, எதிர்பாராமலோ பல்வேறான பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும், இடையூறுகளுக்கும் உள்ளாகின்றான். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலவற்றில் தன்னம்பிக்கையோடு முகங்கொடுக்கின்றான். சிலவற்றில் அவற்றை தீர்க்க முடியாமல் பல்வேறான நெருக்கீடுகளுக்கும், மனத்தாக்கங்க ளுக்கும் உட்பட்டு தமது வாழ்க்கையை சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல முடியாமல் அவதிப்படுகின்றான்.

இவ்வாறாக அவன் பிரச்சினைகளுக்கு உட்படும் போது அவனது உணர்ச்சிகள் மேலோங்குவதோடு அவனது அறிவுசார் நடவடிக்கைகளும் ஒடுக்கப்படுகின்றன.

எனவேதான் உளவளத்துணை செயற்பாடானது அவனது அறிவை தட்டியெழுப்புகின்ற நடவடிக்கையினை மேற்கொள்கின்றது. இவ்வாறான ஆற்றுப்படுத்தல் செயற்பாட்டின் போது மனிதன் தன்னை நேர்மனப்பான்மையோடு நோக்கவும், தன் பிரச்சினையை தெளிவாக உணரவும், தனது பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கும், வாழ்வை சந்தோசமாக எதிர் கொள்வதற்கும் தேவையான சக்தியினையும், திறமையினையும் தன்னுள் வளர்த்துக் கொள்ளவும் முடிகின்றது (ஸ்ராலின்.இரா.2012).

**பாடசாலைகளில் ஆற்றுப்படுத்தல் சேவையின் முக்கியத்துவம்**

ஆற்றுப்படுத்தல் தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு நீண்டகால செயற்பாடாகும். ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளின் மூலம் மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, அத்துறையில் தகைமையும், பயிற்சியும் பெற்றவர்கள் மாத்திரம் ஈடுபடுதல் அவசியமாகும். அத்துடன் அவர்கள் பொருத்தமான ஆளுமைப் பண்புகளையும் பெற்றிருத்தல் வேண்டும். மாணவர்களுக்கு அதீத பயம், நெருக்கீடு, பதகளிப்பு சார் பிரச்சினைகள் ஏற்படாமல் வருமுன் காத்தல், பிரச்சினைகள் ஏற்பட்டு விட்டால் தீர்வு காணல், தீர்வு கண்டதும் அப்பிரச்சினைகள் மீண்டும் ஏற்படாமல் தொடர்ந்து கண்காணித்தல் முக்கியமானவையாகும்.

ஆற்றுப்படுத்தல், நம்பகரமான தரவுகளின் அடிப்படையில் அமைவதுடன், சகல தரவுகளும் பொருத்தமான, நம்பகரமான கருவிகளின் துணையுடன் உடனுக்குடன் பதிவு செய்யப்பட வேண்டும். மாணவர்கள் தம்மைப் பற்றிய விரும்பத்தகாத செய்திகளை வெளிப்படுத்த தயக்கமும் கூச்சமும் காட்டுவர். எனவே அவர்களுடன் தொடர்புடையவர்களான பெற்றோர், பாதுகாவலர், சகபாடிகள் உறவினர்கள் ஆகியோரிடம் பெரும்பாலான தரவுகளை பெற்றுக் கொள்ள வேண்டும். தரவுகள் சேகரிக்கும் கருவிகள் ஆற்றுப்படுத்தலுக்கு பயன்படுத்தப்படும் நுட்பங்கள் என்பன சந்தர்ப்பத்திற்கும் தனியாளிற்கும் பொருந்தக்கூடிய வகையில் நெகிழ்ச்சியானதாக அமைதல் வேண்டும். இத்தகைய நுட்பங்களை தெரிவு செய்வதற்கு ஆற்றுப்படுத்துணருக்கு பூரண சுதந்திரம் உண்டு.

மேற்கூறிய அடிப்படையில் பாடசாலைகளில் ஆற்றுப்படுத்தற் சேவை அமையப்பெற்றாலும், அதனை நடைமுறைப்படுத்தும் போது பல சிக்கல்கள் காணப்படுவதை ஆய்வாளனால் அவதானிக்க முடிந்துள்ளது.

## 2. ஆய்வின் நோக்கங்கள்

- பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையிலுள்ள சவால்களை அறிதல்.
- பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையிலுள்ள பிரச்சினைகளை வெளிக் கொணர்தல்.
- பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையிலுள்ள ஆசிரியர்களின் மனப்பாங்கைக் கண்டறிதல்.

- பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையின் முக்கியத்துவைத்தினை பாடசாலை மட்டத்தில் அறியச் செய்தல்.
- பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையிலுள்ளவர்களின் தகுதிகள், ஆற்றுப்படுத்தலில் எந்தளவிற்குச் செல்வாக்குச் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை அறிதல்.
- பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையிலுள்ளவர்களிடம் ஆற்றுப்படுத்தற் சேவை தொடர்பான ஈடுபாட்டை மேம்படுத்தல்.
- வழிகாட்டலும் ஆலோசனை ஆசிரியர்களின் கடமைகள், பொறுப்புக்களை வரையறை செய்தல்.

## 3. ஆய்வுப் பிரச்சினை

பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவையை முழுமையாக நடை முறைப்படுத்தவதில் பல சிக்கல்கள் காணப்படுகிறன. குறிப்பாக பாடசாலைகளில் இச்சேவையை நடைமுறைப்படுத்த பொருத்தமான ஆளணி வளம் காணப்படாமையும், இதற்காகப் பட்டதாரி நியமனத்தில் உள்ளவாங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றமையும் எனைய நட்புதவியாளர் தரத்திலுள்ளவர்களால் மாணவர்களை முழுமையாகக் கையாள முடியாமல் உள்ளமையும் ஆய்வின் பிரச்சினைகளாக இனங்காணப்பட்டுள்ளது.

## 4. ஆய்வுக்கருதுகோள்

- பாடசாலை ஆற்றுப்படுத்தற் சேவை சவால்கள் நிறைந்ததாகக் காணப்படுகின்றது.
- பாடசாலை ஆற்றுப்படுத்தல் தொடர்பாக ஆசிரியர்களிடம் எதிரான மனப்பாங்கு காணப்படுகின்றது.
- பாடசாலை ஆற்றுப்படுத்தற் சேவையில் உளஆற்றுப்படுத்தற் தகைமை, ஆசிரியர்களின் தொழிலில் செல்வாக்குச் செலுத்துகின்றது.
- ஆற்றுப்படுத்தல் ஆசிரியர்கள் தமது கடமைகள் குறித்த சரியான தெளிவின்றிக் காணப்படுகின்றார்கள்.
- பாடசாலை ஆற்றுப்படுத்தற் சேவையை வினைத்திறனுடன் நிகழ்த்துவதற்கு நிர்வாகம் சார்ந்த அழுத்தம் காணப்படுகின்றது.

## 5. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது அளவைநிலை ஆய்வு மற்றும் பண்புநிலை ஆய்வு பின்பற்றப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட ஆய்வு வகையாக விபரண ஆய்வு அமைகின்றது. இவ்வாய்வானது குறுக்கு வெட்டு ஆய்வாகும். (Cross sectional

study) இவ்வாய்வில் சவால்கள் தீர்ப்பதற்கான வழிகள் ஆகிய மாறிகள் இக்கற்கை நெறிக்காகப் பயன்படுத்தப்படவுள்ளன.

- ஆய்வுக்குட்படுவோர்: வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர்கள்
- ஆய்வுப்பிரதேசம்: வட மாகாணப் பாடசாலைகள்
- பால்: ஆண், பெண் இருபாலாரும்
- மாதிரித் தெரிவு: எழுமாற்றுத் தெரிவு
- மாதிரி எண்ணிக்கை: 300

## 6. ஆய்வு மாதிரிகள்

வடமாகாணப்பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையிலீடுபடுகின்ற பல்வேறு தரங்களிலுள்ள 300 ஆசிரியர்கள் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள்

1- பட்டதாரி நியமனத்தில் உள்வாங்கப்பட்ட வழிகாட்டல்-ஆலோசனை ஆசிரியர்களில் 50 பேர்.
2- தெரிவு செய்யப்பட்டு முறையான பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டு ஆற்றுப்படுத்தற் சேவையிலீடுபடுகின்ற ஆசிரியர்களில் 50 பேர்.
3- விருப்பத்தினடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு, மாகாண உளசமூக வளநிலையத்தின் பயிற்சிகளை கட்டம் கட்டமாக பெற்றவர்களில் 100 பேர்
4- நட்புதவியாளர் என்ற ஆரம்ப கட்டப் பயிற்சியுடன் நீண்ட காலமாக வழிகாமட்டல் ஆலோசனை ஆசிரியர்களாக செயற்படுவோரில் 100 பேர்.

## 7. ஆய்வை மேற்கொள்ளும் முறை

- ஆய்வுக்குட்படுத்தப்படுகின்ற ஆசிரியர்களுக்கு ஆய்வைப்பற்றி விளக்கிக் கூறல்.
- ஆய்வு தொடர்பான தகவல்களை முறையாக அறிவதற்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகளைச் சேகரித்தல்.
- ஆய்வின் போது பெற்றுக் கொண்ட தரவுகளையும் இரகசியமாகப் பேணுவதற்கான உத்தரவாதத்தையும் ஆய்வுக்குட்படுவோருக்கு வழங்குதல்.
- ஆய்வின் முடிவுகளைத் தரவுகளின் அடிப்படையில் வெளியிடல்.

## 8. ஆய்வின் நன்மைகள்

- பாடசாலை வழிகாட்டல்-ஆலோசனைச் சேவையை வினைத்திறனுள்ளதாக்கல்.
- பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவையிலுள்ள சவால்களை இனங்காணுதல்.

- பாடசாலை வழிகாட்டல்-ஆலோசனைச்சேவையிலுள்ள ஆசிரியர்களின் மனப்பாங்கை அறிதல்.
- பாடசாலை வழிகாட்டல்-ஆலோசனைச் சேவையிலுள்ள ஆசிரியர்களின் தகுதி திறமையை வளர்க்க உதவுதல்.

## 9. தரவு சேகரிப்பு


இவ்வாய்வுக்கான தரவுகள் சேகரிப்பதற்கு ஆய்வுக்கருவிகளாக பின்வருவன பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல், அவதானமுறை மூலமும், இரண்டாம் நிலைத்தரவுகள் திணைக்கள அறிக்கைகள், சஞ்சிகைகள், நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் மூலமும் பெறப்பட்டுள்ளன.

## 10. தரவுப்பகுப்பாய்வு

### அ). பட்டதாரி நியமனத்திலுள்ளோர்


| இல | விபரம் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 01 | வேறு பாடங்களைக் கற்பிக்க நிர்ப்பந்திக்கப்படல் | 42 | 84 |
| 02 | துறைசார்ந்த முழுப் பொறுப்பும் தரப்படாமை | 43 | 86 |
| 03 | ஏனையவர்களின் ஆதரவு கிட்டாமை | 35 | 70 |
| 04 | முறைமுகமாக பழிவாங்குதலுக்குட்படல் | 31 | 62 |
| 05 | இடம் ஒதுக்கித் தரப்படாமை | 40 | 80 |
| 06 | மாணவர் விடயங்களை ஒழுக்காற்றுக்குழு கையாளுதல் | 47 | 94 |
| 07 | மாணவர் தொடர்பாக எமது கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமை | 44 | 88 |
| 08 | மன அழுத்தத்திற்கு உட்படல் | 32 | 64 |




### ஆ). முறையான பயிற்சிகளைப் பெற்றோர்


| இல | விபரம் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 01 | மாணவர்களுடைய எல்லாவகைப் பிரச்சினைகளையும் கையாள முடியாமை | 41 | 82 |
| 02 | துறைசார்ந்த முழுமையான அறிவு போதாமை | 45 | 90 |
| 03 | ஏனையவர்களின் ஆதரவு கிட்டாமை | 42 | 84 |
| 04 | நிர்வாகத்திற்கு ஒத்திசைந்து நடக்க நிரப்பந்திக்கப்படல் | 36 | 72 |




**இ). விருப்பத் தெரிவினடிப்படையில் தெரிவு செய்யப்பட்டோர்**


| இல | விபரம் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 01 | மாணவர்கள் எப்பொழுதும் கையாள முடியாமை | 92 | 92 |
| 02 | உடனடி மாற்றங்கள் ஏற்படாமையினால் சலிப்புத் தன்மை | 96 | 96 |
| 03 | கடமைகள் பொறுப்புக்கள் குறித்த தெளிவின்மை | 82 | 82 |
| 04 | ஏனைய ஆசிரியர்களுடன் முரண்பாடுகள் ஏற்படல் | 84 | 84 |




**ஈ) நட்புதவியாளர்.**

| இல | விபரம் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 01 | தொடர் பயிற்சியின்மையால் மாணவர்களைக் கையாள முடியாமை | 83 | 83 |
| 02 | நியமனப்பாடத்தில் கூடிய அக்கறை | 85 | 85 |

| | | | |
|---|---|---|---|
| 03 | ஏனையவர்களின் ஆதரவு கிட்டாமை | 72 | 72 |
| 04 | பாடசாலையில் மதிக்கப்படாமை | 71 | 71 |
| 05 | இடமாற்றங்களின் போது நியமனப்பாடம் கருத்திற் கொள்ளப்படல் | 95 | 95 |




## 11. முடிவுரை

பாடசாலைகளில் வழிகாட்டல்-ஆலோசனைச் சேவையினை சரியாக மேற்கொள்வதில் பல தடைகள் உள்ளதை ஆய்வின் முடிவுகள் காட்டி நிற்கின்றன. ஆற்றுப்படுத்தலுக்கான இடவசதி, போதிய நிபுணத்துவம் வாய்ந்த வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்கள் இன்மை, உள மருத்துவரது சேவையினை பெறுவதில் சிரமம், நிர்வாகத்தினரின் அசமந்தப் போக்கு, கடமைகள் பொறுப்புக்கள் குறித்து ஆசிரியர்களுக்கு தெளிவின்மை போன்றன பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனையை மேற்கொள்வதில் காணப்படுகின்ற தடைநிலைகளாகும்.

## 12. பரிந்துரை

- ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியரையாவது நியமித்தல்.
- பாடசாலைகளில் வழிகாட்டல்-ஆலோசனைக்கு நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்களை வழிகாட்டலும் ஆலோசனைக்கு மாத்திரம் தொடர்ந்து பயன்படுத்துதல்.
- பாடசாலைகளில் பொருத்தமான வகையில் வழிகாட்டலும் ஆலோசனைச் சேவைக்கான இடத்தை ஏற்படுத்தல்.
- வழிகாட்டலும் ஆலோசனை ஆசிரியர்களின் கடமைப்பட்டியலை வரையறை செய்து நடைமுறைப்படுத்துதல்.
- நிர்வாகம், ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி பெற்றோர் மாணவர்களுக்கும் வழிகாட்டலும் ஆலோசனையும் பற்றிய உண்மைத் தன்மையைத் தெளிவாக்கல்.

- உளவியல் சார்ந்த பின்புலக் பட்டக்கற்கைகளைப் பூர்த்தி செய்தவர்களை மட்டும் வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர்களாக நியமித்தல்.
- வுழிகாட்டலும் ஆலோசனை ஆசிரியர் சக வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக கோட்ட, வலய மட்டங்களில் சகபாடிக் குழுக்களை (Peer Group) ஏற்படுத்துதல்.

**உசாத்துணை**


- Vic ram Patel, A School Counselor Casebook, Byword Books Private Limited,2013
- http:// www.colachelnews.com/community/index.php?threads/
- Warren, J. M. (2013a). School counselor consultation: Teachers' experiences with rational emotive behavior therapy. Journal of Rational-Emotive & Cognitive-Behavior Therapy, 31,
- விமலா கிருஸ்ணபிள்ளை,(2004) வழிகாட்டலும் ஆலோசனையும்
- வழித்துணை,(2015) மாகாண உளசமூக வளநிலையம் வடமாகாணம்
- அருட்.பணி.ஸ்ராலின.இரா,(2012) ஆளுமை மலர உளஆற்றுப்படுத்தல்
- அஸ்ஹர்,எம்.எப்.எம்., (2010), உளவளத்துணை ஓர் அறிமுகம், ஏ.ஜே. அச்சகம், தெஹிவளை,பக்.55-57
- சிவதாஸ்.சா (2005), நலமுடன், நிகரி வெளியீட்டு நிறுவனம், பக். 65 – 66